ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்கு

தி.மு.கழக அரசு செய்த சாதனைகளை வரலாறு சொல்லும்!

சட்டப்பேரவையில் கோவி.செழியன் பேச்சு!

சென்னை, ஆக.29-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்ற த்திற்கு தி.மு.க. செய்த சாதனைகள் வரலாறு சொல்லும் என பேரவையில் சமூக நீதித்துறை மானிய கோரிக்கையில் தி.மு.க. சார்பில் கோ.வி.செழியன் பேசுகையில் குறிப்பிட்டார்.

சட்டமன்றத்தில் நேற்று நடைபெற்ற சமூகநீதி துறை மானிய கோரிக்கையின் போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கோ.வி. செழியன் பேசியதாவது:-

ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் நல்வாழ்வு குறித்து சமூக நீதித்துறை சார்பில் இன்றைக்கு இங்கு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, இங்கு அமைச்சர்கள் பேசும் போது, தி.மு.க. ஆட்சியில் ஆதிதிராவிடர் மக்களுக்கு எதையுமே செய்யவில்லை என்று பேசுகிறார்கள்.

எதிர்க்கட்சி என்பது கேள்விகளை கேட்பார்கள் கோரிக்கை வைப்பார்கள், ஆளுங்கட்சி அமைச்சர்கள் அதை செவிமடுத்து உரிய பதில்களை அளிக்க வேண்டும்.

குறிப்பாக ஆளுங்கட்சியினருக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய வார்த்தைகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு வரும்பொழுது கையில் வெறும் கரண்டியோடு வருவார்கள், ஆனால் ஆளுங்கட்சி அமைச்சர்கள் தான் கையில் உள்ள கரண்டியில் எண்ணெயோடு வர வேண்டும், ஒரு துளி சிந்தினால் கூட அது அரசுக்கு நாட்டுக்கு இழப்பு ஏற்படும் என்பது ஒரு கருத்தாகும்.

இங்கு பேசிய பொதுப்பணித் துறை அமைச்சர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன செய்து விட்டீர்கள் என்று கேட்டார்.

சமத்துவ உறுதிமொழி ஏற்பு நாள்!

அவருக்கு நான் சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏப்ரல் 14 அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை சமத்துவ உறுதிமொழிக்கு ஏற்ப நாளாக அறிவித்து தமிழ்நாடு முழுவதும் சாதி சமயம் மறந்து சமத்துவ உறுதிமொழி ஏற்க செய்தது தி.மு.க. அரசு தான்.

அதேபோல் சமூகநீதித்துறை அமைச்சர் தவறான கருத்தை எங்கே பதிவு செய்ய முயற்சிக்கிறார், நாங்கள் எத்தனை பேர் வென்றிருக்கிறோம் எத்தனை பேர் அமைச்சர்களாக இருக்கிறோம் என்று அவர் பதிவு செய்யும் அதே நேரத்தில், உங்களுக்கு முந்தைய தி.மு.க. அரசு அந்த சாதனையை நிகழ்த்தி காட்டியுள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன், இங்கு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு ரூபாய் 25 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்கள்,

இந்த அவையின் மூலம் நிதித்துறை அமைச்சர் சமூக நீதித்துறை அமைச்சர், பொதுப்பணி துறை அமைச்சர் ஆகியோரை கேட்க விரும்புவதெல்லாம், நீங்கள் சொன்ன நிதி எந்தெந்த திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது, எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது என பட்டியலிட முடியுமா என கேட்க விரும்புகிறேன், எனவே உங்களைப் போல் பெயரளவில் மட்டும் சொல்லிவிட்டு போகிற இயக்கமல்ல திராவிட முன்னேற்றக் கழகம், அடித்தட்டு மக்களுக்காக ஆண்டாண்டு காலமாக பாடுபடுகிற இயக்கம், குடிசையில் வாழ்ந்த மக்களை குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கோபுரத்தில் அமர்த்தி காட்டியதுதான் திமுக என்பதையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்,

இங்கு பேசிய அமைச்சர் தி.மு.க. ஏன் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தவில்லை என்று கேட்கிறார், முதன்முதலாக பீகாரில் அது போன்று சாதி வாரி கணக்கெடுப்பு எடுத்தார்கள், நீதி மன்றம் தடையானை விதித்தது, சாதி கணக்கெடுப்பு எடுக்கிற உரிமை ஒன்றிய அரசுக்கு தான் உள்ளது, அவை வலியுறுத்த வேண்டிய கடமை திமுகவிற்கு உள்ளது என்பதுதான் எங்களது நிலை, இங்கு பேசிய பொதுப்பணித் துறை அமைச்சர் 25 ஆண்டு காலமாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு திமுக எதுவும் செய்யவில்லை என்று ஒரு பொதுக்கூட்ட மேடையில் பேசுவது போல பேசினார், அவருக்கு தெரியாதவற்றையெல்லாம் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்,

கழக ஆட்சியில் கணக்கில் அடங்கா சாதனைகள்!

ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்தியாவில் முதன்முதலாக தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகள் கட்டித் தந்தது கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது தி.மு.க. ஆட்சியில் தான், இதனை திறந்து வைத்ததும் அப்போதைய ஒன்றிய நிதி அமைச்சர் பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் தான், திறந்து விட்டு டெல்லி சென்ற பிறகு அப்போதைய பிரதமர் நேரு அவர்களிடம் கலைஞர் அவர்கள் அழைத்ததன் பேரில் தமிழ்நாடு சென்றேன், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பாதுகாப்பான கான்கிரீட் வீடுகளை திறந்து வைத்தேன் என்று கூறியுள்ளார், அதனைக் கேட்ட பாரதப் பிரதமர் நேரு அவர்கள் அதற்குப் பிறகு தான் இத்திட்டம் இந்தியா முழுவதும் விரிவுபடுத்தி னார் என்பது வரலாற்று உண்மை,

அது மட்டுமல்ல கடந்த காலங்களில் கோவிலுக்குள் நுழைய முடியாத நிலை இருந்த ஆதிதிராவிடர் சமூகத்தை அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஒரு திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் சமூகத்திற்கு அங்கீகாரம் அளித்தது தி.மு.க. அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வெளிநாட்டில் கல்வி பயில அம்பேத்கர் அயலக கல்வி நிதி உதவி திட்டம் எனஅ முதல் ஃ க்கு வரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு தனது ஒவ்வொரு ஆட்சி காலத்தின் போதும் கணக்கில் அடங்கா சாதனைகளை செய்தது தி.மு.க. அரசு என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் அவர்களின் தாயார் மறைந்த மணியம்மாள் (எ) மணிமேகலை அவர்களின் திருவுருவப்படத்திற்கு கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர், வால்பாறை நகர கழகச் செயலாளர் குட்டி (எ) சுதாகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம்,

வேங்கை வயல் விவகாரத்தில் பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுத்தது தி.மு.க. அரசு!

சட்டமன்றத்தில் கே.என்.நேரு பேச்சு!

சென்னை, ஆக. 29-

சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் கே.என். நேரு பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் விவகாரத்தைப் பொறுத்தவரைக்கும் அப்படிப்பட்ட நிகழ்வு எங்குமே நடக்கக் கூடாது. இதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இல்லை.

2022 டிசம்பர் 24ஆம் தேதி வேங்கைவயல் சம்பவம் நடந்தது. அந்தச் சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து, டிசம்பர் 26ஆம் தேதி புகார் தரப்பட்டது. புகார் அளிக்கப்பட்ட அன்றைக்கே இந்த விஷயம் தொடர்பாக வெள்ளானூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் தேதி இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கை சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று ஒரு சிலர் வழக்கு போட்டார்கள். அதை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், 29.3.2023 அன்றைக்கு ஓய்வு பெற்ற நீதியரசர் சத்தியநாராயணன் தலைமையில் ஒரு நபர் கமிஷன் அமைத்தார்கள்.

இந்த வழக்கிலே அன்றைக்கு சிபிசிஐடி நூற்றுக்கும் மேற்பட்ட சாட்சிகளிடம் விசாரணை நடத்தினார்கள். பல பேருடைய அலைபேசி எண்கள், தொலைத்தொடர்பு தகவல்கள் ஆய்வு செய்தார்கள். சிலரிடம் உயிரியல் மாதிரி எடுத்து, டிஎன்ஏபகுப்பாய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், மூன்று பேர் குற்ற வாளிகள் என்று உறுதி செய்யப்பட்டு, ஜனவரி 2025இல் நீதிமன்றத்திலே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது.

மிகவும் உணர்வுபூர்வமானஇந்த வழக்கை, எங்கள் தலைவர் தலைமையிலான அரசு மிகவும் கவனமாகையாண்டார்கள்.

ஆனால் சட்டத்துறை அமைச்சரான நம்முடைய சி.டி. நிர்மல்குமார் அவர்கள், அன்றைக்குஇந்த மாதிரிசம்பவம் நடக்கக் கூடாது என்று தான்பதிவு போட்டார்.பிறகு, அந்த பதிவையே நீக்கி விட்டார். அவ்வாறுபதிவை நீக்கினாலும், நல்ல வேளை அதனுடையது இருக்கிறது.

இன்றைக்கு சட்டத்துறை அமைச்சராக இருக்கின்ற சி.டி. நிர்மல்குமார், அன்றைக்கு என்ன செய்தார் தெரியுமா? இந்தச் சம்பவத்திலே கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்று, பாதிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையுமே குற்ற வாளிகள் என்று சொல்லி, சமூக வலைதளத்திலே பதிவு போட்டார். அதன் பிறகு, பல காரணத்தால், அவர் போட்ட பழைய பதிவையெல்லாம் தேடித் தேடி நீக்கிவிட்டார். ஆனாலும் அவர் போட்ட ட்வீட்டுக்கான ஆதாரங்கள் ஸ்கீரீன் ஷாட்ஆகஇருக்கிறது.

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் போட்ட ட்வீட்டுக்கான ஆதாரங்கள் ஸ்கீரீன் ஷாட்ஆகஇருக்கிறது.சரி, நாங்கள்தான் அங்கெல்லாம் போகவில்லை, வர வில்லை என்று சொல்கிறீர்கள். நான் மீண்டும் குற்றம் சொன்னதாக நீங்கள் நினைக்கக் கூடாது. சரி, இப்போது வேங்கைவயலுக்கு எங்கள் தலைவர் போகவில்லை என்று சொல்கிறீர்களே... நாங்கள் உறுதியாகச் செயல்பட்டுகுற்றவாளிகளைக் கண்டுபிடித்தோம். குற்றவாளிகள் முரளிராஜா, சுதர்சன், முத்துக்கிருஷ்ணன் ஆகியோருக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் போகவில்லை என்றுநீங்கள சொல்கிறீர்களே... இன்றைக்கு திண்டுக்கல் மாவட்டத்தில் வடமதுரை அடுத்த தங்கம்மாபட்டியில், அரசு உயர்நிலைப் பள்ளி குடிநீர் தொட்டியில் ஆகஸ்ட் 2ஆம் தேதி மனிதக் கழிவு கலந்திருக்கிறார்கள். அதற்கு இந்த முதலமைச்சர் போனாரா? முதலில் அப்படி ஒரு சம்பவம் நடந்தது என்று அவருக்குத் தெரியுமா? இந்த சம்பவத்திலே யார் மேலாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? தமிழ்நாட்டில் இன்றைக்கு எத்தனையோ குற்றச் சம்பவங்கள் நடக்கிறதே, அதில் ஏதாவது ஒன்றிற்காவது முதலமைச்சர் போனாரா? அதற்கு ஏதாவது விளக்கம் சொல்வார்களா என்று கேட்கின்றேன்.

இவ்வாறு கே.என். நேரு பேசினார்

பத்திரிகையாளர் - எழுத்தாளர் ந.வினோத் குமார் மறைவு!

கனிமொழி கருணாநிதி எம்.பி. இரங்கல்!

சென்னை, ஆக.29-

பத்திரிகையாளரும், எழுத்தாளருமான ந.வினோத் குமார் அவர்கள் நேற்றுமுன்தினம் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்து கனிமொழி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:

பத்திரிகையாளரும் எழுத்தாளருமான திரு. ந.வினோத் குமார் அவர்கள் மறைவெய்திய செய்தி வருத்தமளிக்கிறது.

தமிழரசு இதழில் வெளிவந்த தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனைகளையும் சாதனைகளையும் முக்கிய நூலாகத் தொகுத்தவர். அவரது திராவிட இயக்க வரலாறு தொடர்பான படைப்புகள் முக்கியமானவை.

அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எண்ணூர் அன்னை சிவகாமி நகரில்

தி.மு.க. ஆட்சியில் திறக்கப்பட்ட படகு குழாம் திடீர் மூடல்!

பொதுமக்கள் ஏமாற்றம்!

திருவொற்றியூர், ஆக.29-

சென்னை திருவொற்றியூர் மண்டலம் 3வது வார்டு, எண்ணூர் அன்னை சிவகாமி நகரில் ரயில்வே துறைக்கு சொந்தமான மழைநீர் சேமிப்பு குளம் உள்ளது. இந்த குளத்தில் சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் மண்டலம் சார்பில், ரூ4.62 கோடி செலவில் சுற்றுச் சுவர், நடைபாதை, உணவகம் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டு பூங்கா ஆகியவைகளுடன் படகு குழாம் அமைக்கப்பட்டு கடந்த மார்ச் 1ம்தேதி பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்று லாத்துறை பராமரித்து வருகிறது.

இந்த நிலையில், கடந்த மே மாதம் கடுமையான வெயில் காரணமாக குளத்தின் தண்ணீர் வற்றி மணல் திட்டுகள் தெரிய ஆரம்பித்தது. இதன்காரணமாக குளத்தில் படகை இயக்க முடியாததால் கடந்த 3 மாதங்கள் மட்டுமே செயல்பட்டுவந்த படகு குழாம் தற்போது மூடப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் கடும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இந்த நிலையில், ஏரியை தூர்வாரி மழை நீர் சேமிக்கவும் தற்காலிகமாக நிலத்தடி நீரை மோட்டார்கள் மூலம் உறிஞ்சி ஏரியில் நிரப்பவும் சென்னை மாநகராட்சி திட்டமிடப்பட்டது. ஆனால் பணி கிடப்பில் போடப்பட்டு உள்ளது. இதனால் மக்கள் வரிப்பணத்தில் கட்டப்பட்டுள்ள படகு குழாம் மற்றும் படகுகள், பொழுது போக்கு அம்சங்கள் அனைத்தும் பாழாகி வருகிறது.

சமூக ஆர்வலர்கள் கூறுகையில், "இந்த ஏரியில் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் படகு குழாம் திட்டத்தை செயல்படுத்த எப்படி தீர்மானித்தார்கள் என்று தெரியவில்லை. ஆய்வு மேற்கொள்ளாமல் அவசரகதியில் திட்டத்தை செயல்படுத்தியதால் சுமார் 4.50 கோடி ரூபாய் மக்கள் வரிப்பணம் வீணாகி விட்டது. தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதாலேயே தூர்வாரும் பணியை மேற்கொள்ள அதிகாரிகள் ஆர்வம் காட்டுவதில்லை. இந்த ஏரியின் கட்டமைப்பு பணிகளை மேற்கொண்ட கான்ட்ராக்டர்களுக்கு சுமார் 20 சதவீதம் வரை பணம் தராமல் இழுத்தடிக்கின்றனர். இனியாவது மக்களுக்கு பயன்படக்கூடிய நிரந்தரமான திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வர வேண்டும்" என்றனர்.

கோவை தெற்கு மாவட்டம், கூலூர் கலங்கல் சாலையில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எஸ் திருமண மண்டபம் அருகில் கூலூர் பேரூர் கழக செயலாளர் கௌதமன் புதிதாக துவங்கியுள்ள நூல் நிலம் புத்தக கடையை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், கழக கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்தலை ந.கவுதமன், எழுத்தாளர் மனித உரிமை செயற்பாட்டாளர் வழக்கறிஞர் ச.பாலமுருகன் திறந்து வைத்தனர். இதில் கூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன், தலைமை செயற்குழு உறுப்பினர் பீடம்பள்ளி சுரேஷ்குமார், திராவிட இயக்க தமிழர் பேரவை மாநில அமைப்பு செயலாளர் நாகராஜ், நகர கழக செயலாளர் நித்யா மனோகரன் (கருமத்தம்பட்டி), பேரூர் கழக செயலாளர் விஸ்வநாதன் (கண்ணம்பாளையம்), பேரூராட்சி தலைவர்கள் தேவி மன்னவன் (கூலூர்), புஷ்பலதா ராஜகோபால் (கண்ணம்பாளையம்), மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கூலூர் பிரபு, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் விஜயகுமார் உள்ளபட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

த.வெ.க.வினருக்கு பார்ட்டி ஃபண்ட் தர மறுத்ததால் ரூ.4 லட்சம் மதிப்பிலான போர்வெல் பணியில்

ரூ.65 ஆயிரம் கூடுதலாக கேட்ட த.வெ.க.வினருக்கு டெண்டர்!

தமிழ்நாடு அரசுக்கு ரூ 6.5 லட்சம் இழப்பு!

மயிலாடுதுறை, ஆக. 29-

தமிழ்நாட்டில் பொய்யான செய்திகளை பொதுமக்களிடம் பரப்பி சினிமா மோகத்தில் ஆட்சிக்கு வந்து திறமையற்ற ஊழல் ஆட்சி நடத்தி வரும் விஜய் தலைமையான தவெக அரசு தூய சக்தி என்று தங்களுக்கு தாங்களே தப்பாட்டம் அடித்துக் கொண்டு தமிழ்நாட்டில் பெரும் ஊழல் செய்து வரும் நிலையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒப்பந்த பணிக்கு தவெகவினரின் ரூ 4 லட்சம் மதிப்பிலான பணியை ரூ 3.30 லட்சத்தில் செய்து தர ஒப்பு கொண்டு டெண்டர் கோரியவர் டெண்டரை ரத்து செய்து ரூ 3.95 லட்சம் டெண்டர் கோரிய தவெக ஒன்றிய செயலாளருக்கு டெண்டர் வழங்கிய தற்கு ஒப்பந்தக்காரர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். 4 ஆண்டுகளாக ஒப்பந்தப் பணிகள் செய்ய விண்ணப்பித்து கிடைக்காத நிலையில் கடந்த இரண்டு மாதத்திற்கு முன் விண்ணப்பித்த த.வெ.க. வினருக்கு சால்வஸ் வழங்கிய தற்கும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

10 சதவீதம் பார்ட்டி ஃபண்ட் தர மறுத்த ஒப்பந்ததாரருக்கு மயிலாடுதுறை மாவட்டத்தில் தொடரும் தவெகவினரின் அத்துமீறல் 10சதவீதம் பார்ட்டி ஃபண்ட் தர மறுத்ததால் குறைந்த தொகைக்கு எடுத்த டெண்டர் ரத்து லஞ்சு லாவண்யமற்ற ஆட்சி என்பதை நம்பியவரின் பரிதாபம் அதிக தொகைக்கு டெண்டர் எடுத்தவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்ட தாக புகார் மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய த.வெ.க. செயலாளருக்கு டெண்டர் வழங்கிய த.வெ.க. அரசு.

மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் 10 இடங்களில் தலா ரூ.4 லட்சம் மதிப்பில் போர்வெல் அமைத்து மின் இணைப்பு வழங்குவதற்கான டெண்டரில், குறைந்த தொகைக்கு டெண்டர் எடுத்தவரிடம் 10 சதவீதம் பார்ட்டி ஃபண்ட்' கேட்டதாகவும், அதற்கு மறுப்பு தெரிவித்ததால் அவரது ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதாகவும் பரபரப்பு புகார் எழுந்துள்ளது.

மேலும், குறைந்த தொகைக்கு டெண்டர் எடுத்தவருக்கு ஒப்பந்தம் வழங்காமல், அதிக தொகைக்கு ஏலம் கேட்ட வருக்கு வேலை வழங்கப்பட்டதால் அரசுக்கு சுமார் ரூ.7 லட்சம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஒப்பந்ததாரர் ஒருவர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளார்.

மயிலாடுதுறை பெருந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த அப்துல் அகத் என்பவர் ஒப்பந்தப் பணிகளை செய்து வருகிறார். மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் 10 இடங்களில் போர்வெல் அமைத்து மின் இணைப்பு வழங்கும் பணிக்காக ஒப்பந்ததாரர் மூலம் துணை ஒப்பந்தம் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதற்காக ரூ.40 ஆயிரம் முன்வைப்புத் தொகையை அப்துல் அகத் தனது வங்கிக் கணக்கிலிருந்து செலுத்தியுள்ளார். தலா ரூ.4 லட்சம் மதிப்பிலான பணிக்கு ரூ.3.30 லட்சம் என குறைந்த தொகைக்கு டெண்டர் கோரியுள்ளார்.

டெண்டர் திறக்கப்பட்ட மறுநாளே, 10 சதவீதம் 'பார்ட்டி ஃபண்ட்' வழங்க வேண்டும் என தவெக மாவட்டச் செயலாளர் தரப்பில் கேட்கப்பட்டதாக அப்துல் அகத் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர், நான் ஏற்கனவே 18 சதவீதம் தள்ளுபடி செய்து இந்த வேலையை எடுத்துள்ளேன். மேலும் 10 சதவீதம் வழங்க என்னால் முடியாது என தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து 3 நாட்களுக்குப் பிறகு அவரது ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதாகவும், உடனடியாக ரூ.40 ஆயிரம் முன்வைப்புத் தொகை அவரது வங்கிக் கணக்கில் திரும்ப செலுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விசாரித்த போது, ரூ.4 லட்சம் மதிப்பிலான பணியை ஏற்கனவே ஒப்பந்தம் கோரிய வரைவிட ரூ.65000 கூடுதலாக ரூ.3.95 லட்சத்திற்கு டெண்டர் எடுத்த ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருப்பது தெரிய வந்ததாக அப்துல் அகத் கூறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர், குறைந்த தொகைக்கு டெண்டர் எடுத்தவருக்கு ஒப்பந்தம் வழங்காமல், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் அதிக தொகைக்கு ஏலம் கேட்டவருக்கு டெண்டர் வழங்கியதன் மூலம் அரசுக்கு பண இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறி மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

மேலும், லஞ்சம் மற்றும் ஊழலற்ற ஆட்சி என கூறும் தவெக தரப்பினர், 10 சதவீத 'பார்ட்டி ஃபண்ட்' கேட்டு பணம் வசூலிப்பதுடன், அரசுக்கும் நிதி இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தனது புகாரில் குற்றம் சாட்டியுள்ளார். இந்த விவகாரம் குறித்து உடனடியாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையே, சீர்காழியைச் சேர்ந்த திலீபன் என்பவர் கூறுகையில், தாங்கள் கடந்த 4 ஆண்டுகளாக ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தப் பணிகளுக்காக விண்ணப்பித்து வருவதாகவும், இதுவரை வாய்ப்பு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இதுபோல் சுமார் 10 பேர் ஒப்பந்தப் பணிக்காக காத்திருப்பதாகவும் அவர் கூறினார். கடந்த ஜூன் மாதம் ஒப்பந்ததாரருக்கு மனு அளித்த மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய தவெக செயலாளர் சேத்தூர் முருகேசனுக்கு ஒப்பந்ததாரர் உரிமம் கிடைத்ததைத் தொடர்ந்து, தற்போது அதிக தொகைக்கு ஏலம் எடுத்து 3 டெண்டர்களைப் பெற்றுள்ளதாக அவர் குற்றம்சாட்டினார்.

10 ஆண்டுகளாக துணை ஒப்பந்ததாரராக பணியாற்றி அனுபவம் இருந்தும் எங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் புதிதாக வந்த தவெக ஒன்றியச் செயலாளருக்கு சால்வன்சி சான்று மற்றும் ஒப்பந்தப் பணிகள் கிடைப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என அவர் தெரிவித்தார்.

ஊழலற்ற ஆட்சி நடத்துவதாக கூறும் நிலையில், தவெக ஒன்றியச் செயலாளருக்கு சான்றிதழ்கள் மற்றும் ஒப்பந்தப் பணிகள் கிடைத்திருப்பது குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றும், தகுதியுள்ள தங்களுக்கு அரசு ஒப்பந்தமும் அதற்கான உரிமம் வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.